**செம்பாக்கம் நகராட்சியில் 29.5.2020ம் நாள் வெள்ளிகிழமை மாலை 5.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைப்பெற்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகளின் நகல்.**

**கலந்துக்கொண்ட தனி அலுவலர் பெயர் மற்றும் பதவி:** **திருமதி. கா. ராஜலட்சுமி**
**தனி அலுவலர் / ஆணையாளர்**
**செம்பாக்கம் நகராட்சி**

**பொருள் எண்.1**

செம்பாக்கம் நகராட்சி ஆணையர் அவர்களின் மே 2020 மாதத்திய நாட்குறிப்பேட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.652** பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண்.2**

செம்பாக்கம் நகராட்சிக்கு, தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21ன் கீழ் கீழ்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **Sl. No** | **Ward No** | **Name of the Work** | **Length (in km)** | **Estimate Amount (Rs. in Crore)** |
|---|---|---|---|---|
| 1 | 1,2, 3,7,10, and 12 | **Package-I**<br>Providing BT Surface to<br>**Ward No.1** Kalathumedu Cross Street, Bhavanandhiyar 4th Street, Erikarai Street and Senthil Avenue Main Road**,**<br>**Ward No.2** Gnanaraja Salai, Vivekanandhar 4th Cross Street, R.B. Avenue 2nd Cross Street, Sam Avenue Rukmani Street and R.B. Avenue 1st Street,<br>**Ward No.3** Lakshmikanthan Street**,**<br>**Ward No.7** Sivasakthi Nagar Extn and Saravana Nagar 5th Street,<br>**Ward No.10** Kambar Street, Ezhil Nagar Main Road and<br>**Ward No.12** Maraimalai Adigal Street | 2.033 | 0.90 |
| 2 | 7 | **Package-II**<br>Providing BT Surface to<br>**Ward No.7** Kanagaraja Street, Yogeswari Nagar Main Road, Sivasakthi Nagar 1st Street, Saravana Nagar 1st Street, Saraswathi Nagar 2nd Main Road, VGP Srinivasa Nagar 6th Cross Street, Saravana Nagar Main Road and VGP Srinivasa Nagar 1st Main Road | 1.675 | 0.90 |
| | | **Total** | **3.708** | **1.80** |

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2020–21-ன் கீழ் மேற்கொள்ளவும், அதற்கான நிர்வாக அனுமதி பெறவும், நிதி ஒதுக்கீடு தொகை போக மீதமுள்ள தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.653 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.3

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பராமரிக்கப்படும் தெருவிளக்குகளை பராமரிப்பு பணி செய்ய தெருவிளக்கு பணியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்படாத காரணத்தினால், தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியர் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள கீழ்கண்டவாறு நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்று மூன்றாண்டுகளுக்கு (2017–18 முதல் 2019–20 வரை) பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

| வ. எண் | நகராட்சி நிர்வாக ஆணையரக அனுமதி எண் மற்றும் நாள் | ஆண்டு |
|---|---|---|
| 1 | தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1 நாள் 24.3.2017 | 2017–18 (முதலாம் ஆண்டு) |
| 2 | தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1 நாள் 31.5.2018 | 2018–19 (இரண்டாம் ஆண்டு) |
| 3 | தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் கடிதம் ந.க.எண்.13899/2016/டிஒ1 நாள் 5.7.2019 | 2019–20 (மூன்றாம் ஆண்டு) 31.5.2020 வரை |

மேற்படி மூன்றாண்டு ஒப்பந்த காலம் 31.5.2020ம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, புதியதாக தெருவிளக்கு பராமரிப்பு பணியினை தனியர் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மானம் எண். 651 நாள் 30.4.2020ல் அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான பிரேரணையினை சமர்ப்பிக்கப்பட்டது.

பொது மக்களின் நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கும் வரையில், 1.6.2020 முதல் தெரு விளக்கு பராமரிப்பு பணியினை தற்போது பணி செய்து வரும் ஒப்பந்ததாரார் மெஸ்ஸர்ஸ். சிம்லா கூல் மேக்கர்ஸ் மூலம் 2017 முதல் 2020 வரையில் வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் பணியினை மேற்கொள்ளவும், ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.654 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.4

செம்பாக்கம் நகராட்சி பொது நிதி 2020-21-ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைகும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 15 வரை குடிநீர் பகிர்மான குழாய் விடுபட்ட தெருக்களில் பகிர்மான குழாய் பதித்தல் பணி | 9.80 |
| 2 | கௌரிவாக்கம் வணிக வளாகத்தில் மராமத்து செய்தல் பணி | 3.00 |
| 3 | 1000லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE டேங்க் உடைந்துள்ளதை அகற்றி புதியதாக பொருத்தும் பணி மற்றும் சரவணா நகர், மணிமேகலை தெரு, சங்கோதியம்மன் கோயில் தெரு, கணேஷ் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக வால்வு பொருத்தும் பணி | 5.50 |
| 4 | களத்து மேடு தெரு, 2வது பஜனை கோயில் தெரு, ஆர்.பி. அவென்யு, ஆகிய பகுதிகளில் எற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக 5 எச்பி மோட்டார் இறக்கி நேரடி நீருந்தும் செய்யும் பணி | 5.40 |
| 5 | பரிமேல் அழகர் தெரு, ஏரிக்கரை தெரு, காவேரி தெரு, வசந்தம் அவென்யு ஆகிய பகுதிகளில் எற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக 5 எச்பி மோட்டார் இறக்கி நேரடி நீருந்தும் செய்யும் பணி | 7.50 |

அலுவலக குறிப்பு :–

1. தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மான எண்.655 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.5

செம்பாக்கம் நகராட்சியின் அனைத்து பிரிவின் அலுவலக பராமரிப்பிற்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் அச்சுப்பொருட்கள் ஆண்டு ஒப்பந்தப்புள்ளிதாரர் மூலம் கொள்முதல் செய்து பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆண்டு ஒப்பந்தப்புள்ளியின் காலம் முடிவு பெற்ற நிலையில், கொரோனா வைரஸ் தொற்று குறித்து அரசின் 144 தடை உத்திரவு நடைமுறையில் உள்ளதாலும், புதியதாக ஆண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி கொள்முதல் செய்ய இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி சென்ற நிதியாண்டின் ஆண்டு ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகித அடிப்படையில், அதே ஒப்பந்ததாரர் மூலம் தேவைப்படும் எழுது பொருட்களை வாங்கிடவும், அதற்கான தோராய செலவின மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**தீர்மான எண்.656        அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

செம்பாக்கம் நகராட்சி பகுதியில் முதலில் ராகவேந்திரா நகர் என்ற பெயரில் உள்ளதை தொடர்ந்து வீடுகள் அதிகம் வந்ததால் கிருஷ்ணா அவென்யு என பெயர் மாற்றப்பட்டதின் அடிப்படையில் அந்த தெருவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் 4 வீடுகள் உள்ளன. அதில் 3 வீடுகள் திரு.ஜி.விவேக் என்பவர் பெயரிலும் மற்றொன்று திரு.ரவி என்பவர் பெயரிலும் உள்ளது என திரு.விவேக் என்பவர் மனு கொடுத்துள்ளார். எனவே 4 வீட்டிற்கும் சரியான முறையில் வரி நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதனை தொடர்ந்து தவறுதலாக திரு.ஜி.விவேக் என்பவர் பெயரில் கூடுதலாக விதிக்கப்பட்ட வரி விதிப்பு எண் 001/008/00409ல் இல்லாதது கள ஆய்வின் மூலம் தெரிய வந்ததை தொடர்ந்து இரட்டை வரி விதிப்பு என்பதால் தவறுதலாக உள்ள வரிவிதிப்பு எண் 001/008/00409 யை ரத்து செய்து மேற்படி வரிவிதிப்பு எண்ணில் உள்ள 2020—21 ன் ஆண்டின் படி நிலுவை தொகை ரூ.8280/— யை வஜா செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>        மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.102/2020/அ1

**தீர்மான எண்.657        அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

செம்பாக்கம் நகராட்சி எல்லை முடிவு 10வது வார்டில் அமைந்துள்ள வள்ளலார் தெருவில் பாதி தெரு செம்பாக்கம் நகராட்சி பாதி தெரு தாம்பரம் பெரு நகராட்சி எல்லையில் அமைந்துள்ளது. அதில் கதவு எண் 3 ல் உள்ள அடுக்குமாடி குடியிருப்பானது தாம்பரம் பெரு நகராட்சி எல்லையில் அமைந்துள்ளது. ஆனால் இந்நகராட்சியில் 8 வரிவிதிப்பு எண்கள் 2014—2015ம் ஆண்டு தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட கட்டிடம் தாம்பரம் பெருநகராட்சியால் சொத்து வரி செய்யப்பட்டுள்ளது என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. வரி விதிப்பு எண்கள் 009/019/00110, 00111, 00112, 00113, 00114, 00115, 00116, 00109 என 8 வரி விதிப்பு எண்களுக்கு 2019—2020 இரண்டாம் அரையாண்டு வரை நிலவையின்றி தாம்பரம் நகராட்சியில் செலுத்தப்பட்டு வருகிறது என திரு.ஆர்.பாலகிருஷ்ணன் என்பவர் மனு கொடுத்துள்ளார். எனவே செம்பாக்கம் நகராட்சியில் தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்ட வரிவிதிப்பு எண்கள் 001/010/00489, 00490, 00491, 00492, 00493, 00494, 00495, 00496 யை கொண்ட 8 வரி விதிப்பு எண்களை நீக்கம் செய்வது தொடர்பாக நேரில் கள ஆய்வு செய்யப்பட்டதில் இந்நகராட்சி எல்லையினை தாண்டி வரிவிதிப்பு செய்யப்பட்டது கண்டறியப்பட்டது. தவறுதலாக கேட்பு தொடர்ந்து வரும் ஆண்டில் தொடர்ந்து வருவதை கண்டறியப்பட்டது. எனவே DCB யை சரிசெய்யும் பொருட்டு தவறுதலாக வரிவிதிப்பு செய்யப்பட்ட 8 வரிவிதிப்பு எண்களை 2020—21ம் ஆண்டு வரை நீக்கம் செய்து, 2020—21ம் ஆண்டு வரை உள்ள நிலுவைத் தொகை ரூ.57,018/— யை வஜா செய்ய மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>        மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.102/2020/அ1

**தீர்மான எண்.658        அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.8

செம்பாக்கம் நகராட்சி பொது சுகாதார வாகனங்களான காம்பாக்டர் லாரி TN11 Q 6615 மற்றும் ஜெசிபி வாகனம் TN11 J 7516 போன்ற வாகனங்களின் டயர்கள் மிகவும் பழுதடைந்த நிலை ஏற்பட்டு இயக்க இயலாமல் அவ்வப்போது பஞ்சர் ஆகி தொடர்ந்து குப்பைகள் அகற்றும் பணி தாமதமாகிறது. இதன் காரணமாக பொது மக்களிடமிருந்து குப்பைகள் உரிய நேரத்தில் எடுக்க இயலாததால் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது.

எனவே, பொது மக்களின் நலன் கருதியும், தற்போது கொரோனா வைரஸ் பரவி வருவதாலும், மத்திய மற்றும் மாநில அரசுகளின் மூலம் அறிவிக்கப்பட்ட பொது ஊரடங்கு உத்திரவினை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செயல்படுத்த இயலாத சூழ்நிலையில், அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ளவும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும், உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரிய வகையில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருளின் விவரம் | விலைப்புள்ளி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | | |
|---|---|---|---|---|
| | | கீர்த்தி டையர்ஸ் 87, வேளச்சேரி மெயின் ரோடு, பள்ளிக்கரணை, சென்னை 600100 | விஸ்வகர்மா எண்டர்பிரைசஸ் 4/26, கக்கன் தெரு, நீலாங்கரை, சென்னை 41 | ஜெய் ஹனுமான் டையர்ஸ் 4/110, கிழக்கு கடற்கரை சாலை, நீலாங்கரை, சென்னை 115 |
| 1 | Compactor Tyre 50+R MRF Tyre, Tube and Flap 4 Set (Size 8/25/20) | 55500 | 56600 | 56000 |
| 2 | JCB Tyre TTR 707 MRF Tyre, Tube and Flap 2 Set (Size 9/00/16) | 23300 | 24300 | 24000 |
| | விலைப்புள்ளி விகிதம் | குறைவு | அதிகம் | அதிகம் |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள கீர்த்தி டையர்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு:**

1. இச்செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசிய பணியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், டயர், டியுப் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் நேரடி விற்பனையாளர் / விநியோகஸ்தர்கள் ஆகியோரிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.659** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

செம்பாக்கம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 15 வார்டுகளில் பொது சுகாதார பணிக்காக தமிழக அரசு பொது மக்களிடம் கொரோனா தொற்று முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்காக விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுறுத்தப்பட்டதன் படி, ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலைப்புள்ளி விலை விகிதத்தில், ஆட்டோ மைக்செட் மூலம் விளம்பரம் செய்யவும், இதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. விளம்பர செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் மன்ற முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மான எண்.660 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

தமிழக அரசு மூலம் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளின் கீழ் 144 தடை உத்திரவி பிறப்பிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளதால், அவசர அவசியம் கருதி இந்நகராட்சியில் 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளின் விவரம் மற்றும் செலவினத் தொகை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | கொரோனா தொற்று ஏற்படாத வகையில் சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், விளம்பர பலகைகள் அச்சிட்டு சப்ளை செய்த ஸ்ரீ கிருஷ்ணா பிரிண்டர்ஸ்க்கு வழங்கியது | 151700 |
| 2 | பொது சுகாதாரம் முதல் நிலை சேகரிப்பு வாகனங்களான டாடா ஏஸி 5 எண்ணிக்கை (TN11 AJ 8283, TN11 AJ 8220, TN11 AJ 8245, TN11 AJ 8264, TN11 AJ 8201) ஆகிய வாகனங்களுக்கு பழுது நீக்கம் பணி செய்தமைக்கு எம்.கே.எஸ். மோட்டார்ஸ்க்கு வழங்கியது | 196700 |
| 3 | கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் 3000 கி சப்ளை செய்த ஓம் சக்தி எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு வழங்கியது | 165000 |

அலுவலக குறிப்பு: அவசர அவசியம் கருதி 1920ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்ட பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்கு மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மான எண்.661 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்
செம்பாக்கம் நகராட்சி